மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.எஸ். சந்திரசேகரன். (குறுக்கீடு) திரு. இரா. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றான சோளிங்கர் லட்சுமிநரசிம்ம சுவாமி மலைக் கோயில் என்னுடைய தொகுதியில் உள்ளது. அந்த மலைக் கோயிலைச் சுற்றியுள்ள மலைகள் தற்போது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றன..

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமற்றது. வினா எண் 51, திரு. ஆர். சாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

51—

அரசு கலைக் கல்லூரி

•19520—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரியில் இளநிலை பட்டப் படிப்பு படித்துவிட்டு, முதுநிலை பட்ட மேற்படிப்பிற்கு வெளி மாவட்டங்களுக்குச்

2005 பிப்ரவரி 7]

செல்ல மாணவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மிகவும் பின்தங்கிய தொகுதி மேலூர் தொகுதி. ஆகையால், அந்த ஏழை மாணவ, மாணவியர்கள் படிக்க மேலூரிலே இருக்கின்ற அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி., விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பட்ட மேற்படிப்புகளை அரசே அங்கு தொடங்கினால், அந்தப் பகுதி ஏழை மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகையால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த ஏழை மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணம் கட்டிப் படிக்க இயலாத காரணத்தினால், படிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில் எல்லா சாதனைகளும், திட்டங்களும் மேலூர் தொகுதியிலே முழுமையாக நிறைவேறியிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாடப் பிரிவுகளை மட்டும் அங்கே தொடங்கினால் இன்னும் நிறைய சிறப்படைய வாய்ப்பு இருக்கின்றது. ஆகையால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து இந்தப் பாடப் பிரிவுகளை மேலூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பாடப் பிரிவுகளைத் தொடங்க அக்கல்லூரியிலிருந்து விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. அப்பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அக்கல்லூரியிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அதற்கான விண்ணப்பத்தினை சுயநிதி அடிப்படையில் அப்பாடப் பிரிவுகளைத் தொடங்குவது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *52*, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.